# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-106** **தேதி:-12.06.2016**

## முப்பெரும் விழா- விரிவடைந்த மாநில செயற்குழு- அகில இந்திய மாநாட்டு வரவேற்புக் குழு அமைப்பு- வெற்றி விழா

அன்பார்ந்த தோழர்களே,

தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கத்தின் விரிவடைந்த மாநில செயற்குழு, 7ஆவது அகில இந்திய மாநாட்டு வரவேற்புக்குழு அமைப்பு மற்றும் 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பில் BSNL ஊழியர் சங்கம் பெற்றுள்ள DOUBLE HATRICK வெற்றியை கொண்டாடும் விழா என முப்பெரும் விழாக்கள் 10.06.2016 அன்று தூத்துக்குடி அண்ணா கலையரங்கத்தில் சி"றப்பாக நடைபெற்றது.

BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில தலைவரும், அகில இந்திய உதவி பொதுச் செயலாளருமான தோழர் S.செல்லப்பா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாக்களின் முதல் நிகழ்வாக தேசியக் கொடியினை தமிழ் மாநில BSNL உழைக்கும் மகளிர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளர் தோழர் P.இந்திரா ஏற்றி வைக்க, நமது சங்கக் கொடியினை விண்ணதிரும் கோஷங்களுக்கு இடையே நமது பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் ஏற்றி வைத்தார்.

தமிழகம் முழுவதும் இருந்து வந்திருந்த 500க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்ற விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழுவில் தமிழ் மாநில துணைத்தலைவர் தோழர் V.வெங்கட்ராமன் அஞ்சலி உரை நிகழ்த்தினார். இந்த விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழுவில் பங்கேற்ற அனைவரையும் தமிழ் மாநில அமைப்பு செயலாளர் தோழர் R.M.கிறிஸ்டோபர் வரவேற்றார். நமது மாநில தலைவர் தோழர் S.செல்லப்பா அவர்களின் தலைமையுரைக்கு பின் தமிழ் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் ஆய்படு பொருட்களின் மீதான விவாதக் குறிப்பை அறிமுகம் செய்து உரையாற்றினார்.

நமது விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழுவினை நமது அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையினில் BSNL ஊழியர் சங்கம் பெற்று வரும் தொடர் வெற்றியின் பெருமைகளையும், அதற்காக நமது சங்கம் செய்துள்ள சாதனைகளையும் பட்டியலிட்டுக் காட்டினார். ஊதியமாற்றம் உள்ளிட்ட பிரச்சனைகளில் நாட் செய்ய வேண்டிய பணிகள் தொடர்பாகவும், எதிர் வரும் செப்டம்பர் 2 பொது வேலை நிறுத்தம் தொடர்பாகவும் விரிவாக எடுத்துரைத்தார்.

அவரது துவக்க உரைக்கு பின் தமிழகத்தில் உள்ள 19 மாவட்ட செயலாளர்களும் தங்களின் கருத்துக்களை விவாதத்தில் எடுத்துரைத்தனர். அதற்கு பின்னர் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1) நடந்து முடிந்த 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலில் BSNL ஊழியர் சங்கம் 6ஆவது முறையாக வெற்றி பெற்றுள்ளதை பெருமையுடன் கொண்டாடும் வேளையில் அதற்காக பாடுபட்ட அகில இந்திய பொது செயலாளர் உள்ளிட்ட மத்திய சங்க நிர்வாகிகளையும், மாநில சங்க நிர்வாகிகளையும், மாவட்ட செயலாளர்கள் உள்ளடக்கிய அனைத்து மாவட்ட சங்க நிர்வாகிகளையும், கிளை செயலாளர்கள் உள்ளிட்ட கிளை சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து முன்னணி ஊழியர்களையும், கூட்டணி சங்கங்களான SNATTA மற்றும் BSNLMS சங்க தோழர்களையும், SEWA BSNL முன்னாள் பொது செயலாளர் தோழர் ரவீந்திரன் மற்றும் அவரது தோழர்களையும், நமது தோழமை சங்கங்களான AIBDPA மற்றும் TNTCWU சங்கத்தின் தோழர்களையும் விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு நன்றியுடன் பாராட்டுகிறது. இந்த பிரமாண்டமான வெற்றியினை அடைவதற்கு BSNL ஊழியர் சங்கத்திற்கு வாக்களித்த அனைத்து ஊழியர்களுக்கும் தமிழ் மாநில விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது,
2) அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் இணைந்து நடத்த உள்ள செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்தை தமிழகத்தில் வெற்றிகரமாக நடத்துவது என தீர்மாணிக்கப்பட்டது.
3) ரயில்வே ஊழியர்கள் உள்ளிட்ட அனைத்து மத்திய அரசு ஊழியர்களும் இணைந்து 2016, ஜூலை 11 முதல் நடத்த உள்ள கால வரையற்ற வேலை நிறுத்தத்திற்கு விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு தனது ஆதரவினை தெரிவிப்பதோடு, அவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக ஜூலை 12 ஆம் தேதி அனைத்து கிளைகளிலும் ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என விரிவடைந்த மாநில செயற்குழு கிளைகளை கேட்டுக் கொண்டுள்ளது.
4) தமிழ் நாடு தொலை தொடர்பு பணியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் முன் நாம் வைத்த கோரிக்கைகளுக்காக தொடர்ந்து சென்னை தொலைபேசி மாநில சங்கத்துடன் இணைந்து இயக்கங்களை நடத்துவது எனவும் விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு முடிவு செய்துள்ளது.
5) நேரடி நியமன TTAக்களுக்கான மாநிலம் தழுவிய கருத்தரங்கம் ஒன்றினை நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.
6) நமது இந்த பிரமாண்டமான வெற்றியை தொடர்ந்து புதிய உறுப்பினர்களுக்கான படிவங்களை ஜூலை 15க்குள் பெறுவதற்கான பணிகளை விரைவு படுத்த வேண்டும் என விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு கிளை மற்றும் மாவட்டசங்க நிர்வாகிகளை கேட்டுக் கொள்கிறது.
7) நமது கிளை மற்றும் மாவட்ட சங்கங்களின் மாநாடுகளை எதிர்வரும் செப்டம்பர் மாதத்திற்குள் நடத்தி முடித்து விட வேண்டுமென தமிழ் மாநில விரிவடைந்த செயற்குழு அனைத்து கிளை மற்றும் மாவட்ட செயலாளர்களை கேட்டுக் கொள்கிறது.
8) சென்னை காமராஜர் அரங்கில 2016 டிசம்பர் 31 முதல் 2017 ஜனவரி 3ஆம் தேதிவடை நடைபெற உள்ள BSNL ஊழியர் சங்கத்தின் 7ஆவது அகில இந்திய மாநாட்டினை வெற்றிகரமாக நடத்திட மாவட்டங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கோட்டாக்களை விரைவில் பூர்த்தி செய்வது என ஏகமனதாக விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு முடிவு செய்துள்ளது. (இந்த விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழுவில் கலந்துக் கொண்ட தோழர்களில் ஒரு சிலர் மட்டும் 7ஆவது தமிழ் மாநில மாநாட்டிற்கு 2,20,000 ரூபாய்களுக்கான நன்கொடையினை வழங்கினர். அதில் ஈரோடு மாவட்டத்தை

சார்ந்த ஒரு சில தோழர்கள் மட்டும் 1,17,000 ரூபாய்களை வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.)

9) தூத்துக்குடியில் நடைபெற்ற BSNL ஊழியர் சங்கத்தின் விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு 7ஆவது அகில இந்திய மாநாட்டினை நடத்திட கீழ்கண்ட தோழர்களை கொண்ட ஒரு வரவேற்புக் குழுவினை ஏகமனதாக தேர்ந்தெடுத்துள்ளது.

தலைவர் :- தோழர் T.K.ரங்கராஜன் MP
செயல் தலைவர் :- தோழர் S.செல்லப்பா
பொது செயலாளர் :- தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன்
பொருளாளர் :- தோழர் K.சீனிவாசன்
துணைத்தலைவர்கள் :- BSNL ஊழியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர்கள், மற்றும் தோழர்கள் C.பழனிச்சாமி AGS BSNL CCWF, C.வினோத் குமார் CS TNTCWU, C.K.நரசிம்மன் CS AIBDPA, K.கோவிந்தராஜ் CS, BSNLEU, CTD.
உதவி செயலாளர்கள் :- BSNL ஊழியர் சங்கத்தின் மாநில உதவி செயலாளர்கள்.

நமது மாநில சங்கத்தின் உதவி பொருளாளர், அமைப்பு செயலாளர்கள், மற்றும் நமது அனைத்து மாவட்ட செயலாளர்கள் ஆகியோர் வரவேற்புக் குழு உறுப்பினர்களாக செயல்படுவார்கள்.

சென்னையில் உள்ள இதர சகோதர சங்கங்களையும் கலந்தாலோசித்து, இதர மத்திய, மாநில, பொதுத்துறை மற்றும் தனியார் துறையில் செயல்படும் சங்கங்களின் நிர்வாகிகளையும் இந்த வரவேற்புக் குழுவில் இணைத்துக் கொள்வது என்றும் விரைவில் சென்னையில் இந்த வரவேற்புக் குழுவின் கூட்டத்தை நடத்துவது என்றும், மாநாட்டின் தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு கணக்குகளை மாநாடு முடிந்தவுடன் தமிழ் மாநில செயற்குழுவின் ஒப்புதல் பெற்று அகில இந்திய சங்கத்திற்கு அனுப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

நல்லதொரு உற்சாகத்துடன் நடைபெற்ற இந்த தமிழ் மாநில விரிவடைந்த செயற்குழுவினை நமது தமிழ் மாநில சங்கத்தின் உதவி தலைவர் தோழர் C.சுவாமி குருநாதன் நன்றி கூறி முடித்து வைத்தார்.

7ஆவது சங்க அங்கீகார தேர்தலில் இமயத்தின் உச்சியில் செங்கொடியினை நாட்டிய BSNL ஊழியர் சங்கத்தின் வெற்றி விழா அதே மண்டபத்தில் மாலை 4 மணி அளவில் நமது மாநில தலைவர் தோழர் S.செல்லப்பா தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது. மாநில உதவி செயலாளர் தோழர் M.முருகையா வந்திருந்த அனைவரையும் வரவேற்றார்.

இந்த வெற்றி விழா கூட்டத்தில் AIBDPA சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் C.K. நரசிம்மன், TNTCWU சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் C.வினோத் குமார், SEWA BSNL சங்கத்தின் முன்னாள் தமிழ் மாநில செயலாளர் தோழர் A. சிவராமன்,

BSNL WWCCயின் மாநில அமைப்பாளர் தோழர் P இந்திரா, BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், SEWA BSNL சங்கத்தின் முன்னாள் பொது செயலாளர் தோழர் ரவீந்திரன், BSNL ஊழியர் சங்கத்தின் உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் தனது சிறப்புரையில், BSNL ஊழியர் சங்கம் பெற்றுள்ள பிரமாண்டமான வெற்றி தொடர்பாகவும், வெற்றி பெற்ற பின்னணியில் நமது சங்கம் சாதிக்க வேண்டிய பிரச்சனைகள், பொதுத்துறை நிறுவன அதிகாரிகளுக்கு மத்திய அரசு நியமித்துள்ள 3ஆவது ஊதியக் குழு, மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கைகள், அவற்றை எதிர்த்து நாம் நடத்த வேண்டிய இயக்கங்கள் உள்ளிட்ட பல பிரச்சனைகளை எடுத்துரைத்தார்.

முன்னதாக இந்த முப்பெரும் விழாவினை ஒரு குறுகிய கால இடைவெளியில் மிக சிறப்பாக ஏற்பாடு செய்த தூத்துக்குடி மாவட்ட சங்க தோழர்களை பாராட்டும் விதமாக அதன் முக்கிய தோழர்களான மாநில அமைப்பு செயலாளர் தோழர் R.M.கிறிஸ்டோபர், மாவட்ட செயலாளர் தோழர் M.ஜெயமுருகன் மற்றும் மாவட்ட பொருளாளர் தோழர் பன்னீர் செல்வம் ஆகியோரை மாநில சங்கம் கௌரவித்தது.

மாநிலந்தழுவிய அளவில் பெருமளவிலான ஊழியர்கள் திரண்டிருந்த இந்த உற்சாகமான வெற்றி விழாவினை தூத்துக்குடி மாவட்ட செயலாளர் தோழர் M.ஜெயமுருகன் அவர்கள் நன்றி கூறி வெற்றி விழாவினை நிறைவு செய்தார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**